30.01.2024

அ.வ.எண். 168-2019 மற்றும் 72-2020

வாசா.1 - ரமேஷ்குமார்

<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

நான் மற்ற வாதிகளுடன் சேர்ந்து கே.வி.குப்புசாமி செட்டியார் மீது இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன். எங்களுக்கு பாத்தியப்பட்ட பூமியை நாங்கள் மனைகளாக பிரித்து விற்பனை செய்து விட்டோம். திருச்சி ரோட்டில் இருந்து கண்ணம்பாளையம் கிராமத்திற்கு க.ச.எண்.179 நம்பர் காலையில் தென்வடலாக ஒரு ரோடு செல்கிறது என்றால் ஆமாம். எங்களது லேயவுட் மூலையில் இருந்து தென்மேற்காக அந்த தடம் சேர்கிறது என்றால் ஆமாம். மனைப்பிரிவுகளுக்குள் உள்ள தடத்தை கண்ணம்பாளையம் பஞ்சாயத்திற்கு நாங்கள் ஒப்படைப்பு செய்து விட்டோம். எங்களிடம் மனைப்பிரிவுகளை கிரயம் பெற்றவர்கள் லேயவுட் தடத்தின் வழியாக கண்ணம்பாளையம் பஞ்சாயத்து ரோடு அடைந்து அதன் மூலம் மெயின் ரோட்டிற்கு வர முடியும் என்றால் ஆமாம்.

இந்த வழக்கு சம்மந்தப்பட்ட தடம் பஞ்சாயத்தில் ஒப்படைக்கப்பட்ட தடம் இல்லை என்றால் ஆமாம். எங்களுக்கும் கே.வி.குப்புசாமி அவர்கள் மனைவிக்கும் கடந்த 1986ல் ஒரு விவசாய தடப்பாத்திய ஒப்பந்தம் எழுதப்பட்டது என்றால் ஆமாம். அந்த பத்திரத்தில் மேற்படி தடத்தை விவசாய காரியத்திற்கு மட்டும் பயன்படுத்திக் கொள்ளலாம் என்று எழுதப்பட்டுள்ளது என்றால் ஆமாம். வழக்கு சொத்தை நாங்கள் ஏற்கனவே விற்பனை செய்து விட்டதால் அதில் எங்களுக்கு எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. வழக்கு சொத்திற்கு அருகில் உள்ள எங்களுக்கு பாத்தியப்பட்ட பூமியில் சுமார் 50 செண்ட் நிலம் எங்களுக்கு இன்னும் உள்ளது. மீதம் உள்ள இடம் மற்றவர்கள் கிரயம் பெற்றவர்கள் வீடு கட்டி இருக்கிறார்கள்.

கண்ணம்பாளையம் பஞ்சாயத்திற்கு எங்களது மனைப்பிரிவுகளுக்கு உட்பட்ட தடத்தை நாங்கள் எழுதிக்கொடுக்கும்பொழுது வழக்கு தடத்தை தனியார் தடமாக காட்டி எழுதிக்கொடுத்துள்ளோம். மேற்படி வழக்கு தடத்தில் பிரதிவாதி திருச்சி ரோட்டை ஒட்டி கேட் அமைத்துள்ளார் என்றால் ஆமாம், எங்களது அனுமதியின் பெயரில் தான் கேட் அமைத்துள்ளார் இந்த சங்கதிகளை என்னுடைய வழக்குரையில் நான்

சொல்லவில்லை. 154 நம்பர் காலையில் உள்ள பூமி பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டது. மேற்படி 154 பூமியை ஒட்டி மேல்புறமாக 155 நம்பர் காலையில் திருச்சி ரோட்டில் இருந்து தென்வடலாக ஒரு தடம் செல்கிறது என்றால் ஆமாம். 155 நம்பர் காலையும் பிரதிவாதியின் தனிப்பட்ட இடம், இந்த வழக்கிற்கு சம்மந்தப்பட்ட இடம் இல்லை.

பிரதிவாதிதான் தாவா தடத்தை தார் ரோடு அமைத்து பராமரித்து வருகிறார் என்றால், எங்களது அனுமதியின் பெயரில் தான் பராமரித்து வருகிறார். எங்களது அனுமதியின் பெயரில் பிரதிவாதி தடத்தை பராமரித்து வருகிறார் என்று வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கு தடம் பிரதிவாதியின் கல்லூரிக்கும், அதற்கு பின்பு தொடர்ச்சியாக பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட விவசாய பூமிக்கும் செல்கிறது என்றால் சரியல்ல. பிரதிவாதிக்கு கல்லூரிக்கு பின்பு விவசாய பூமி இல்லை என்றால் வேறு என்ன வகையான காலியிடம் உள்ளது என்றால் அது எனக்கு தெரியவில்லை. உள்ளே சென்று என்ன வகையான இடம் என்று நான் பார்த்ததில்லை.

என்னிடம் காட்டப்படும் பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்ட மாதிரி வரைபடம் சரியானது தான் அது பி.வா.சா.ஆ.1. என்னிடம் காட்டப்படும் புகைப்படங்கள் என்னுடைய சொத்து சம்மந்தமாகவும், தாவா சொத்து சம்மந்தமாகவும் எடுக்கப்பட்ட புகைப்படங்கள் என்றால் சரியல்ல, அது எனக்கு சரியாக தெரியவில்லை. 2வது புகைப்படம் பேக்கிரியை ஒட்டி செல்லும் கண்ணம்பாளையம் தடம். 3வது புகைப்படம் கண்ணம்பாளையம் பஞ்சாயத்து தடம் சம்மந்தப்பட்டது தான். 9வது புகைப்படம் எனது மனைப்பிரிவில் இருந்து கண்ணம்பாளையம் செல்லும் தடத்தை காட்டக்கூடிய புகைப்படம். மேற்படி மூன்று புகைப்படங்கள் பி.வா.சா.ஆ.2. ஆக குறியீடு செய்யப்படுகிறது.

பிரதிவாதி வழக்கு தடத்தில் உரிமையில்லாதவர்கள் தான் செல்லக்கூடாது என வாய்மொழியாக கூறினார்கள் தவிர நாங்கள் குறிப்பிடும் வகையில் எங்களை தடுக்கவில்லை என்றால் சரியல்ல. நானும், என் தகப்பனாரும் பிரதிவாதியுடன் நல்ல உறவில் இருந்து கொண்டே இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல.

குறுக்குவிசாரணை தொடர்ச்சிக்கு வேறு ஒரு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுறது.

Sd/ரமேஷ்குமார்

Taken down by me to open court read over to the witness and acknowledged by her to be corrected

N RENUGA Digitally signed by N RENUGA Date: 2024.01.30 17:39:14 +0530

District Munsif
Sulur